

கலைஞானச்சுடர்

# திருமதி நாகம்மா மகாலிங்கம் அவர்களின்

# இசைவாழ்வும் பணியும்



## கலாபூஷணம் திரு.எல். திலகநாயகம் போல் அவர்களின்

## ஞாபகார்த்தக் கையேடு

2023

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்களின்
14ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக

12.01.2024 அன்று

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில்
நிகழ்த்தப்பட்ட

# "திலகாரப்பணம்"

*நிகழ்வின் போது வெளியிடப்பட்டது*



தொகுப்பு:
கலாவித்தகர். திருமதி. குமுதா உமாகாந்தன்
ஆசிரியர்.
யாழ்.சென். ஜோண்ஸ் கல்லூரி
&
"சோமராகம்" இசைமன்றம்
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# முன்னுரை

"செந்தமிழைப்பேணிப்பாதுகாப்போம்" எனும் உணர்வை முன்னிலைப் படுத்தி தனது இறுதிக்காலம் வரை தமிழிசைப்பாடல்களைப்பாடி இலங்கையின் கர்நாடக இசை வளர்ச்சியில் நீங்கா இடம் பிடித்தவர் "இசைச்செம்மல்" சங்கீத பூஷணம் திரு. எல். திலகநாயகம் போல் அவர்கள். அவர்களின் 14ஆம் ஆண்டு நினைவாக நிகழ்த்தப்படும் "திலகார்ப்பணம்" இம்முறை 12.01.2024 அன்று நிகழ்த்தப்படுகின்றது.

நானும் ஒரு ஆசிரியர் எனும் வகையில் எமது கல்விப்புலத்தில் உள்ள நேரசூசி மாற்றங்களுக்கு அமைவாக 2023ஆம் ஆண்டிற்கான நிகழ்வை இவ் விடுமுறைக் காலத்தைப் பயன்படுத்தி 2024ஆம் ஆண்டில் நிகழ்த்த வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மூத்த இசைக்கலைஞரும், இசை ஆசானும்; 80 – 90களில் யாழ்ப்பாணத்தின் இசை "ஜாம்பவான்கள்" என்று அழைக்கப்பட்ட "கணபதிப்பிள்ளை பத்மலிங்கம், சுந்தரலிங்கம், திலகநாயகம் போல்" என்போரில் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்களின் மாணவியுமாகிய திருமதி நாகம்மா மகாலிங்கம் அவர்களை கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தொழில்நுட்ப வளர்ச்சியும், கைத்தொலைபேசிப் பாவனையின் பெருக்கமும் எமது இளம் சமுதாயத்தினரை மனோதர்ம இசை, கர்நாடக இசை என்பவற்றுள் ஆர்வமும் குன்றி; மெல்லிசை, திரையிசைப்பாடல்களை நோக்கி நகர்த்தி வருகின்றது. இன்று திரையிசைப்பாடல்களைப் பாடுபவர்களே சிறந்த இசைக் கலைஞராக நோக்கப்படும் காலமாக மாறிவரும் நிலையில் எமது கலைப்பாரம் பரியத்தையும், அதன் ஆழத்தையும், சிறப்பையும் சரிவரக் கற்பிக்க வேண்டிய தேவை எம் போன்ற கர்நாடக இசை ஆசிரியர்களின் கடமை ஆகும். அந்தவகை யில் மாணவர்களை சாஸ்திரிய இசையில் வழிப்படுத்தி அவர்களின் இசையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது குருநாதராகிய திலகநாயகம் போல் அவர்களுக்கு "திலகார்ப்பணம்" நிகழ்வினை நடாத்தி வருகின்றேன்.

2023ஆம் ஆண்டிற்குரிய "திலகார்ப்பணம்" நிகழ்வில் இசைக்கலாவித்தகர் திருமதி நாகம்மா மகாலிங்கம் அவர்களுக்கு "இசைத்திலகம்" எனும் விருதினை வழங்கி கௌரவித்து "இசைவாழ்வும் பணியும்" என்கின்ற இக் கையேட்டினை வெளியிடுவதன் ஊடாக எனது குருவின் பாதம் பணிந்து நிற்கின்றேன்.

இக்கையேட்டைத் தயாரிப்பதற்கு எனக்கு பூரண ஒத்துழைப்பை நல்கிய அம்மையாரின் புதல்வி திவ்வியா அக்காவிற்கும், அம்மையாரின் குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் என்னுடன் தோழோடுதோழ் நின்று இக்கையேட்டை அச்சிடுவதற்கு உதவிய எனது மாணவன் ஸ்ரீ.ஸ்ரீபரன் (ஆசிரியர், யா/சென். ஜோண்ஸ் கல்லூரி) அவர்களிற்கும் நன்றிகள். நிகழ்ச்சி ஒழுங்குகளிற்கு துணைநின்ற எனது மாணவனும், மன்றத்தின் ஆசியருமான திரு.ஸ்ரீ.சாருஜன் அவர்களிற்கும் எனது நன்றிகள். மிகவும் குறுகியகாலத்தில் இக்கையேட்டை அச்சிட்டு தந்துதவிய மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ் நிறுவனத்தினருக்கும், எனது குருநாதரின் குடும்பத்தினர், எனது மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், பெரியோர்கள், நண்பர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றிகள்.

எனது இம் முயற்சி தொடர்ந்தும் நன்முறையில் நடந்தேற எல்லாம் வல்ல இறைவனதும், எனது அன்னையினதும், என் குருவினதும் பாதாரவிந்தங் களைப் பணிந்து உங்கள் அனைவரதும் ஆதரவை வேண்டி இக்கையேட்டை உங்கள் கரங்களில் தவழவிடுகின்றேன்.


கலாவித்தகர். திருமதி. குமுதா உமாகாந்தன்
"சோமராகம்" இசைமன்றம்
&
யாழ்/சென். ஜோண்ஸ் கல்லூரி
இசை ஆசிரியர்.

*"சோமராகம்"*
323/8D, *கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்,*
*இலங்கை.*
+94776407643
kumuthanallur@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கலாவித்தகர் திருமதி நாகம்மா மகாலிங்கம் அவர்களின் இசைவாழ்வும் பணியும்



***பிறப்பிடம்*** **:** தென்மராட்சிப்பகுதியில் உள்ள மந்துவில் என்னும் கிராமம்

***பெற்றோர்*** **:** திரு. திருமதி சின்னத்தம்பி – செல்லம்மா தம்பதியினர்

***பிறந்தகாலம்*** **:** 28.03.1946

***இயற்பெயர்*** **:** நாகம்மா

இயற்கையாகவே பச்சைப்பசேலென்று அழகு கொஞ்சும் நிலவளமும், ஆன்மீக சக்தியும் நிறைந்ததும், தமிழும் ஆன்மீகமும் ஒரு சேர பேணிப் பாதுகாக்கும் ஊர் தென்மராட்சி என்றால் மிகையாகாது. அத்தகைய தென்மராட்சியில் மந்துவில் எனும் ஊரில் பிறந்தவரே நாகம்மா அம்மையார் ஆவார்.

இவ்வூரானது நாட்டுக்கூத்து, சரித்திர நாடகங்கள், காவடி ஆட்டம், கோலாட்டம், கும்மி போன்ற கலைவடிவங்களை தமது கிராமிய பாரம் பரிய நிகழ்வுகளாக தன்னகத்தே கொண்டிருந்தது. குறிப்பாக சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, கோவலன் கண்ணகி, அரிச்சந்திரன் போன்ற இசை நாடகங்களையும், பாடல்களையும் தமக்கான வடிவமைப்பில் இசையமைத்துப் பாடி நடித்துவந்துள்ளனர். இவ்வாறு கலை கலாசாரப் பாரம்பரியங்களும் பக்தியும், நன்வரன் முறைகளும் கொண்ட சந்ததியில் பிறந்தவரே நாகம்மா அம்மையார். இவர்களது சந்ததியினர் தொடர்ந்தும் பிரகாசிக்க முடியாமைக்கு இவர்களது வறுமையே காரணமாக அமைந்தது.

எனினும் இக்கலைப்பாரம்பரியத்தில் உதித்த தவமணி, இராசையா, தேவி, குலசிங்கம் என்கின்ற இரண்டு சகோதரர்கள், இரண்டு சகோதரிகளுடன் உதித்த நாகம்மா அம்மையார் இசைக்காகவே தன்னை அர்ப்பணித்துள்ளார். இவர்களுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி என்னும் சகோதரி நடனத் துறையில் கற்று நடன ஆசிரியராகவும், திரு. குலசிங்கம் என்பர் நுண்கலைப் பட்டதாரி ஆகி இசை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளனர்.

***ஆரம்பக்கல்வி :*** தனது ஆரம்பக்கல்வியை மந்துவில் றோ.க பாடசாலையில் தரம் 8 வரை கற்று தொடர்ந்து யா/வரணி மகாவித்தியாலயத்திலும் கற்றுள் ளார். இவர் தனது பாடசாலைக் காலங்களிலேயே இயற்கையாகவே அமைந்த கலை ஞானத்துடன் தேவாரப்பாடல்களையும் திருவாசகம், சிவபுராணம் என்பவற் றையும் பண்ணோடும் பக்தியோடும் இசைக்கவல்லவர்.

***இசைக்கல்வி :*** இவர் இயற்கையாகவே பெற்றிருந்த இசைஞானத்தை மெருகூட்டுவதற்காக; இவரது மாமனார் இவரை 5ஆவது வயதிலேயே மீசாலை சங்கீத பூஷணம் திரு. குமாரசாமி அவர்களிடம் சேர்த்துவிட்டார். எனினும் குறுகிய காலத்தில் சங்கீத ஆரம்ப பாடங்களை மட்டுமே கற்க முடிந்தது.

தொடர்ந்து பாடசாலையின் கற்றல் நடவடிக்கையில் இருந்த இசைப்பாடல்களை நன்முறையில் கற்று தன்னை வளப்படுத்திக் கொண்டார். அக்காலகட்டத்தில் அவரது பாடசாலை ஆசிரியராக இருந்த சங்கீதபூஷணம் திரு. ஆ.காத்திகேசு (அல்வாய்) அவர்களால் வழிப்படுத்தப்பட்டார். அதன் பிரகாரம் அவர்களின் வழிகாட்டலில் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் தரம் 2 முதல் 4வரை சித்தியெய்தினார்.

காத்திகேசு ஆசிரியரின் பாடசாலை இடமாற்றத்தைத் தொடர்ந்து தரம் 5, 6 பரீட்சையை தொடர்வதற்கு இரு வருடங்கள் தடைப்பட்டது. அவ்வாறு தடைப்பட்ட காலத்தில் திருமதி பூமணி இராசரட்ணம் அவர்களிடமும், சாரதா, பாரதா சகோதரிகளிடமும் குறுகிய கால இடைவெளிகளில் பல உருப்படிகளை யும் கற்று தன்னை மெருகேற்றிக் கொண்டார். தொடர்ந்தும் கற்பதற்கான ஆர்வமிருந்தும் வசதி வாய்ப்புக்கள் இன்மையால் கற்க முடியாமல் போனது.

இதே காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஓதுவார் திரு.இராசசேகரன் அவர்கள் பல பகுதிகளிற்கும் சென்று இலவசமாகப் பண்ணிசை வகுப்புக்களை நடாத்தி வந்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாகம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரும், அவரது சகோதரி தேவியும் அவரிடம் பண்ணிசையைக் கற்றனர். இவரிடம் தொடர்ந்து கற்றதனால் ஓதுவாரது பிரிவுபசார விழாவில் சகோதரிகள் இருவரதும் இசைக்கச்சேரி ஒழுங்குபடுத்தப்பட்டது. இதற்கு வயலின் வித்துவான் திரு. சித்திவிநாயகம் அவர்கள் வயலின் வாசித்தார். இதுவே இவரது அரங்கேற்ற மாக அமைந்ததுடன் பலரது பாராட்டையும் பெற்றது.



இந்நிகழ்வில் இவர்களது குரல்வளத்தையும் கலை ஞானத்தையும் இனங்கண்ட சித்திவிநாயகம் அவர்கள் யாழ். ரசிகரஞ்சன சபாவில் இசையை இலவசமாகக் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார். இங்கே சங்கீதபூஷணம் திரு. பொன் சுந்தரலிங்கம், சித்திவிநாயகம், விஸ்வநாத ஐயர் என்பவர்களிடம் கற்கும் வாய்ப்புக்கிடைத்தது எனினும் ஓரிருவருடங்களுடன் இதுவும் தடைப்பட்டுப்போக திரு. பொன் சுந்தரலிங்கம் அவர்களிடம் தனிப்பட்ட ரீதியில் இசையைக் கற்று இசைத்திறனை மெருகேற்றிய தோடல்லாமல் வ.இ.சங்கீத சபையின் 5ஆம், 6ஆம் தரங்களை சித்தியெய்தி இசைக் காலாவித்தகர் ஆனார்.

சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் அவர்களே இவரது திறமையை முன்னிறுத்தி பல மேடை வாய்ப்புக்களை ஏற்படுத்தி இவரது ஆற்றலை உலகறி யச்செய்தார். இது மட்டுமன்றி இவருக்கு ஆசிரிய நியமனம் கிடைப்பதற்கும் வழிகாட்டினார். இவரது வேண்டுதலுக்கிணங்கவே தொடர்ந்து பல ஆண்டுகளாக நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இசை ஆசிரியராக சேவையாற்றி பல மாண வர்களையும் உருவாக்கியதுடன் மாணவர் நிகழ்ச்சிகளையும் மேடையேற்றி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணவாழ்வும் சிறப்பும்:**

1975ல் சரசாலையைச் சேர்ந்த பொதுப்போக்குவரத்து ஊழியராகக் கடைமையாற்றிய திரு. மகாலிங்கம் அவர்களை கரம் பற்றி இல்லறவாழ்வின் சிறப்பாக ஒரு பெண் குழந்தையையும், இரு ஆண் வாரிசுகளையும் பெற்றெடுத் தனர். திரு. மகாலிங்கம் அவர்கள் பின்னர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கடைமையாற்றி ஓய்வு பெற்றவராவார்.

மூத்த மகள் செல்வி உதயதிவ்வியமணி யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பட்டதாரி. அத்துடன் தொடர்ந்து இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதுகலைமானி பட்டத்தினையும் (2003 - 2005), கொடைக்கானல் அன்னை தெரேசா பெண்கள் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவ மாணி (ஆய்வியல் நிறைஞர்) பட்டத்தினையும் (2005 - 2007) பெற்றுக் கொண்டுள்ளதுடன்; யாழ்.பல்கலைக்கழக நண்கலைப் பீடத்தில் தொடர்ந்து 5 வருடங்கள் உதவி விரிவுரையாளராக கடமையாற்றும் அதேவேளை கொழும்பு “திய்வநாதலய" மன்றத்தினை நடாத்தி அதன் மூலம் தனது இசைக்கச் சேரிகளை நன்முறையில் நிகழ்த்தி வருகின்றார்.

இருமகன்களுமே இசைப்பயிற்சி பெற்றவர்களே. மூத்த மைந்தன் கமலகலாதரன் யாழ்.நுண்கலைப் பீடத்தில் கற்றவர். தற்பொழுது யாழ்ப்பாணத் தின் புதுவசந்தம் செயற்திட்ட பணிப்பாளராகக் கடமையாற்றிவருகின்றார். இளையவர் தயாபரன் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் பட்டதாரி, தற்போது வேலணை பிரதேச சபைப்பிரிவில் தொழில்புரிகின்ற அதேவேளை வட இலங்கை சங்கீத சபைப்பரீட்சையில் ஆசிரியர் தரத்தைச் சித்தியெய்தி “கலாவித்தகர்" பட்டம் பெற்றவர். இதன் மூலம் பல இசைப் போட்டிகளில் வெற்றியீட்டியதுடன், சக்தி தொலைக்காட்சி சூப்பர் சிங்கராகவும் திகழ்ந்து இசை நிகழ்ச்சிகளிலும், நடன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்கேற்றங்களிலும் பாடி வருவதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் திருமணமாகி குழந்தைகளு டன் நன்முறையில் வாழ்ந்து வருகின்றனர்.



**தொழில் :**

1977.05.23இல் திருகோணமலை கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் நியமனம் பெற்று தனது ஆசிரிய வேலையை ஆரம்பித்த இவர் கோப் பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் 1980இல் இசை ஆசிரியர் பயிற்சி பெற்று தொடர்ந்து முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் கற்சிலைமடு அ.த.க பாடசாலை, விஸ்வமடு மகாவித்தியாலயம், யா/திருக்குடும்ப கன்னியர் மடம், யா/செங்குந்தா இந்துக்கல்லூரி போன்றவற்றில் பணியாற்றி 22.03.2006 இல் ஓய்வுபெற்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசைப்பணி:**

1977இல் ஆசிரியப்பணியை திருகோணமலையில் ஆரம்பித்த திலிருந்து இவரது இசைப்பணி ஆரம்பமானது, இவர் திருகோணமலை, முல்லைத்தீவு விசுவமடு, வரணி, யாழ்ப்பாணம் எனப்பல்வேறு இடங்களி லும் கற்பித்த வேளையில் பாடசாலை மாணவர்களிற்கு இசையைக் கற்பித்து க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப்பரீட்சை களில் மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிக்க மிகவும் அரும்பாடுபட்டுள்ளார்.

அத்துடன் இணைப்பாடவிதான செய்ற்பாடுகளாக குழுப்பாடல், தனி இசை, இசை நாடகம், நாடகம் போன்றவற்றை மாணவர்களுக்கு பயிற்று வித்து மேடையேற்றித் தானும் அக மகிழ்ந்து பாராட்டுக்களையும் பெற்றுள் ளார். அகில இலங்கைத் தமிழ்த்தினப்போட்டியில் தனி இசை, குழு இசை, நாட்டார் பாடல் போன்ற போட்டிகளில் வலயம் முதல் தேசியம் வரை மாண வர்கள் வெற்றியீட்டி பரிசில்கள் பெறச் செய்துள்ளார்.

இதே வேளை பிற மாவட்டங்களில் பணிபுரிந்த போதும் சரி சொந்த ஊரில் சேவை ஆற்றும் போதும் சரி அவ்வவ் இடங்களில் தனது வீட்டிலும் பொது இடகங்களிலும் இசை வகுப்புக்களை நடாத்தி இசையை வளர்த்து வந்துள்ளார். அத்துடன் தனது மாணவர்கள் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளில் சித்தி எய்துவதற்கும் வழிப்படுத்தியுள்ளார். இம் மாண வர்களை பொது வைபவங்கள், ஆலய விழாக்கள் என்பவற்றிலும் நிகழ்ச்சிகள் செய்வதற்கு ஊக்கப்படுத்தி வந்துள்ளார்.

தனது மாவட்டத்தில் ஆசிரியபணியில் இருந்த போதும், ஓய்வு பெற்ற பின்னரும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர் களுக்கும் பிரத்தியேகமாகக் கற்பித்து அவர்கள் பட்டம் பெறுவதற்கும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையின் ஆசிரியர்தரம் சித்தியெய்தவும், கலாவித்தகர் பட்டம் பெறவும் அவர்களை நெறிப்படுத்தி வந்தார்.

திருகோணமலையில் ஆரம்பத்தில் கற்பித்தது முஸ்லிம் பாடசாலை என்பதனால் அங்கு கற்பித்தலுக்கு அப்பாற்பட்டு இவரது இசைப்பணியை முன்னெடுக்கமுடியாத வண்ணம் காணப்பட்டது. அவ்வாறு இருந்த போதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு வெளியில் தனியார் நிறுவனங்கள், ஆலயங் களின் நிகழ்வுகள் போன்றவற்றில் இசைக்கச்சேரி, பண்ணிசைக் கச்சேரி என்ப வற்றை செவ்வனே நிகழ்த்தி வந்துள்ளார். பிற மாவட்டங்களிற்கு இடம்மாற்றம் பெற்ற போதும் இவ்வாறே இவருடைய சங்கீதப் பயணம் தொடர்ந்தது.

யாழ்ப்பாணத்தில் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் வருடாந்த இசை விழா, நல்லூர் உற்சவகால தெய்வீக இசை அரங்கு போன்றவற்றிலும் தனது இசைக்கச்சேரிகளை நிகழ்த்தி பலராலும் விரும்பப்பட்டும், பாராட்டப்பட்டும் வந்துள்ளார்.

1980இல் கோப்பாய் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் இசை ஆசிரிய பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் கலைஞர் தேர்தவில் தெரிவு செய்யப்பட்டு வானொலி “B” தரக் கலைஞராக 1985 ஆம் ஆண்டு வரை இசைக்கச்சேரிகளையும் பாடல்களையும் பாடிவந்ததுடன், பக்தரஞ்சனி போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி வந்துள்ளார். இதன் மூலம் இலங்கையின் தமிழ்ப்பிரதேசங்களிலெல்லாம் இவரது பக்தி மிகுந்த தெய்வீகக் குரல் ஒலித்து வந்துள்ளது.

இவற்றை விட கல்வி வலயத்தால் நடாத்தப்படும் தமித்தினப்போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள், ஏனைய பாடசாலைகளின் பாடசாலை மட்ட இசைப்போட்டிகள் என்பற்றிற்கும், தனியார் கழகங்கள், மன்றங்கள், ஆலயங்கள் என்பவற்றால் நடாத்தப்படும் இசை, பண்ணிசைப்போட்டிகளிற்கும் எவ்வித மறுப்பும் தெரிவிக்காது, பலாபலன்கள் எவற்றையும் எதிர்பார்க்காது நடுவராகக் கலந்துகொண்டு செவ்வனே நடாத்திக்கொடுத்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இசை சார்ந்து எதுவித உதவியையும் யார் கேட்டுச் சென்றாலும் தயங் காது, இல்லை என சொல்லாது அதற்கு தகுந்த உதவியை செய்து கொடுப்பது இவரது பண்பாகும். நற்பண்பும், பண்பாடும், கண்டிப்பும் ஒருதாயாக அரவணைப்பும் மிக்க இவ் இசை ஆசான் மிக அமைதியாகத் தன் பணியாற்றி வந்துள்ளமையை கண்ணூடாக கண்டுள்ளேன். எமது யாழ்/சென். ஜோண்ஸ் கல்லூரியின் இசைப் போட்டிகளிற்கும் பிரதான நடுவராக பல தடவை கலந்துகொண்டு எம் மாணவர்களையும் வழிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்க்கைக்கேற்ப மிக எழிமையும் ஆற்றலும், மங்களகரமான வதனமும் கொண்ட இவர் யாரிடமும் தேவையற்ற பேச்சோ, பிரச்சினைகளோ இன்றி தூய்மையான வாழ்வு வாழ்ந்ததோடல்லாமல் தன் மாணவர்களுக்கு இசையுடன் நற்பண்புகளையும் ஊட்டி வளர்த்த பெருந்தகையாளராவார்.

இவரது இசைப்பணியைப் பாராட்டி நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசாரப்பேரவை 2017ஆம் ஆண்டு "கலைஞானச்சுடர்" எனும் விருது வழங்கி கௌரவித்தமை சிறப்பிற்குரியது.

இவரிடத்தில் இசையைக்கற்ற மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்:

| | |
|---|---|
| எஸ். ரவிச்சந்திரன் | எஸ். ரசிதா |
| கே. அருள் வேந்தன் | எஸ். சுஜித்தா |
| கே. சிவமதி | ஆர். றெஜினா, |
| ஆர். சசிகலா | என். திருவேணி |
| கே. தயாளினி | எம். தயாபரன் |
| கே. கருணைச்செல்வி | பா. ஜசிந்தா |
| ஊ. ஜானுதி | செ. கீர்த்தனா |
| செ. சங்கீரணி | கே. மனோரஞ்சன் |
| பா. மோகனா | உ. வைஷ்ணவி |
| ஜெனகன் முத்துக்குமார். | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலைச்சிறப்பு:**

இயற்கையாகவே கலைஞானமுடைய குடும்பப்பாரம்பரியத்தில் பிறந்த நாகம்மா அவர்கள் சிறுவயதிலிருந்தே பல இன்னல்களையும், இடையூறுகளையும் தாண்டியே தனது இசைப்பயணத்தை தொடர்ந்துள்ளார். தனது ஐந்தாவது வயதில் கலைப்பயணத்தை ஆரம்பித்த இவரால் பொருளாதார நெருக்கடி காரணமாக கற்க முடியாமல் போனாலும் அதற்கு அவர் இடம்கொடுக்கவில்லை.

1967, 1968 ஆம் ஆண்டுகளில் அவரது ஊரில் கட்டப்பட்டு நடாத்தப்பட்டு வந்த நெசவுக்கைத்தொழில் நிலையத்தில் இணைந்து கிழமை நாட்களில் தொழில்பார்த்து அதில் வரும் வருமானத்தில் ஏனைய இரண்டு வார இறுதி நாட்களில் இசையைக் கற்றுத்தன்னை வளப்படுத்திவந்துள்ளார்.



இவ்வாறு விடா முயற்சியும், தன்னார்வமும், துணிவுமே இவரை இசைப்பயணத்தில் தன்னையும் தடம்பதிக்கச் செய்துள்ளது. இவர் வானொலியில் பாடுகின்ற போது இவரது திருவாசகத்திற்கு மயங்காதவர்கள் எவரும் இருந்திருக்க முடியாது. இவரது குருநாதர் பொன். சுந்தரலிங்கம் அவர்கள் திருவாசகம் பாடினால் கல்லும் கனியும் அத்தகைய பக்திச்சுவையுடையது. அவ்வாறு குருநாதரின் வழியில் இவரும் திருவாசகம் பாடினால் அனைவரும் மெய்மறந்து போவார்கள். தனது இசைக்கச்சேரியில் கச்சேரி தர்மம் பிறளாது பிரதான உருப்படி வரை பாடுவார். பின்னர் பக்திப்பாடல், பக்திச் சுவையும் கர்நாடக சங்கீத பண்புமுடைய பழைய திரையிசைப்பாடல் அல்லது மெல்லிசைப் பாடல்கள் போன்றவற்றையும்; திருவாசகம், இராகமாலிகை விருத்தம் போன்றவற்றைப்பாடி திருப்புகழுடன் அமைதியாக கச்சேரியை நிறைவு செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனினும் இவரது திருவாசகப்பாடல்களையும், இராகமாலிகை விருத் தங்களையும் இசை தெரியாதவர்கள் கூட விரும்பி மெய் மறந்து கேட்பார்கள். அத்துடன் அக்கால கட்டத்தில் இந்தியாவில் இருந்து வருகைதந்து இசைக்கச்சேரி நிகழ்த்துபவர்களிடம் பார்வையாளர்கள் தாம் விரும்பிய பாடல்கள் எழுதிய பேப்பர் துண்டங்களை அனுப்பி பாடுவிப்பார்கள். அதே போன்று நாகம்மா அம்மையாரின் கச்சேரிகளிலும் பட்டம்மாள், கே.பி. சுந்தராம்பாள் போன்றோரின் பாடல்களைக் குறிப்பிட்டு பாடுமாறு வேண்டி பாடல் எழுதிய பேப்பர் துண் டங்களை அனுப்புவார்கள். அந்தளவிற்கு நற் குரல் வளமும் பார்வையாளரைக் கவரும் திறனும் கொண்டிருந்தார்.

இவரது சகோதரர் அமரர் குலசிங்கம் அவர்களும் இசைப்பட்டதாரியாக விளங்கி இசை ஆசிரியராக கடமை ஆற்றியவர். காலத்தின் கோலத்தால் நோய்வாய்ப்பட்டு அவரது இசைச்சேவை இடையே குன்றியிருந்தாலும் அவரது குரலில் அமைந்த தமிழீழ எழுச்சிப்பாடல்கள் இன்றும் தமிழர்களின் காதுகளில் ஒலித்த வண்ணம் உள்ளன. இவரது சகோதரி திருமதி தேவி நடன ஆசியராக விளங்கியதோடல்லாமல் ஒரு வயலின் கலைஞராகவும் திகழ்ந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. இன்று ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஜேர்மன் நாட்டில் வாழ்ந்து வருகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாரின் புதல்வி, புதல்வர்களும் இன்றுவரை கலைப்பயணத் தைத் தொடர்ந்து வருகின்றனர். குறிப்பாக திவ்வியாஞ்சலி சிறந்த இசை ஆசிய ராகவும், இசைக்கலைஞராகவும் திகழ்ந்து வருகின்றார். இவ்வாறாக அம்மை யாரின் வழியில் அவரது சந்ததியினரும் கலைச்சேவை புரிந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

விடாமுயற்சியுடனும், தளராத மனதோடும் தனது இசைப்பயணத்தை தொடர்ந்து இன்று வயதின் மூப்பினாலும், உடற் தளர்வினாலும் தனது புதல்வி யுடன் வாழ்ந்து வரும் அம்மையாரின் கலைச்சிறப்பைப்போற்றி "இசைத்திலகம்" எனும் சங்கீத பூஷணம் எல்.திலகநாயகம் போல் ஞாபகார்த்த விருதினை வழங்கி அவரை கௌரவித்து அவர் பற்றிய ஒரு சில விடயங்களையாவது எமது சந்ததியினருக்கு வெளிப்படுத்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"கலைகள் சிறந்தோங்க வாழ்த்துவமே"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print By : Mathi Colours, Nallur. 021 2229285
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org